www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

121 அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# பரவலாய் நடந்த பாலியல் வன்முறைகள்!

## பாலியல் வன்முறைகள்

இந்தியப் படை உயரதிகாரிகள் சிலர் தமது படையினரின் பலவீனங்களை நன்கு அறிந்துவைத்திருந்தனர்.

1987 நவம்பர் மாத தொடக்கத்தில் இந்தியப் படையினரின் பாலியல் வன்முறைகள் அதிகமாகத் தொடங்கின.

இந்தியப்படை அதிகாரிகள் சிலர் பொது மக்களிடம் ஒரு யோசனை தெரிவித்தார்கள்.

"இந்தியப் படையினர் அத்துமீறி நடந்தால் அவலக்குரல் எழுப்பி சத்தமிடுங்கள். அவர்கள் ஓடிவிடுவார்கள்" என்பதுதான் அவர்கள் சொன்ன யோசனை.

உண்மையில் பல இடங்களில் அந்த யோசனை பலன் அளித்தது. சத்தம் போட்டுக் கத்தினால் இந்தியப் படையினர் ஓடிவிடுவார்கள் என்பதை மக்களும் அறிந்து கொண்டனர்.

இந்தியப் படையினர் வீடுகளுக்குள் புகுந்து கெட்ட நோக்கத்துடன் நெருங்கும்போது வீட்டில் இருப்பவர்கள் கத்திக் குரல் கொடுக்க அயலவர்கள் திரண்டு வந்துவிடுவர். படையினர் நைசாக நழுவி ஓடிவிடுவார்கள்.

வயது வித்தியாசம் இல்லாமல் இந்தியப் படையினரால் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

'முறிந்தபனை' ஆவணத்தில் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாக திரட்டப்பட்ட சில தகவல்களை இங்கே தருகிறேன்.

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட 38வயதான ஒரு பெண்மணி கொடுமையை விபரிக்கிறார்.

## 'செக்கிங்'

நவம்பர் 12ம் திகதி காலை 8 மணியளவில் மூன்று இந்திய இராணுவத்தினர் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அப்போது எனது அம்மா சமையலறையில் இருந்தாள். நானும் என்னுடைய மகளுமே அவர்களைப் பார்த்தோம்.

"செக்கிங்" என்று மட்டுமே சொல்லிவிட்டு எனது மகளை ஒரு அறைக்குள் தள்ளினார்கள்.

நான் அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு கத்தினேன். "அம்மா அம்மா தேடுகிறார்கள்" என்று சொல்லிக் கத்தினேன்.

உடனே எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த காவல் நிலையத்திலிருந்த படையினர் வீட்டுக்குள் ஓடிவர ஆரம்பித்தனர்.

எனது வீட்டுக்குள் இருந்த மூன்று படையினரும் "தாங்கள் சோதனையிட மட்டுமே வந்ததாகவும், உடனடியாகப் போய்விடுவோம்" என்றும் கூறினார்கள்.

எனது தங்கச் சங்கிலியை அவர்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் நல்லாகப் பயந்து போயிருந்தோம். பின்னர் எனது மகளை பெட்டி போன்று இருந்த பின்பக்க சிறு அறையில் ஒளித்து வைத்துக்கொண்டேன்.

பின்னர் 9.30 மணியளவில் அதே மூன்று இராணுவத்தினர் மீண்டும் வருவதைக் கண்டேன்.

இப்போது அவர்கள் இராணுவக் காவல் நிலையை நோக்கி இருந்த வீட்டின் முன்வாசல் வழியாக வராமல், காலியாக இருந்த இன்னொரு வீட்டின் ஊடாக வீடுகளுக்கிடையே தடுப்புச் சுவரைத் தாண்டி வந்தனர்.

பின்னர் அவர்கள் எனது பெற்றோரை ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டினார்கள்.

என்னை ஒரு அறைக்குள் தள்ளிக் கொண்டுபோய், துப்பாக்கி முனையில் ஒருவர் பின் ஒருவராக மூன்றுபேர் என் மீது பாலியல் வன்முறையை மேற்கொண்டனர்.

நான்கூச்சல் போடவில்லை. கூச்சல் போட்டு அதனால் என் பெற்றோரை சுட்டுவிட்டால் என்ன செய்வது?

கொழும்புக்கு பஸ்கள் ஓட ஆரம்பித்த முதல்நாளே நான் யாழ்ப்பாணத்தைவிட்டு, எனது கிராமத்தை விட்டுப் போய் விட்டேன். பயங்கரக் கனவுகள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. அவர்களுடைய முகங்கள் அடிக்கடி தோன்றின. அவர்களுடைய குரல்கள் அடிக்கடி கேட்பது போல தோன்றின.

பின்னர் எனது மகளைக் கூட்டிக் கொண்டு வெளிநாடு சென்றேன். ஒரு மனநல வைத்தியரைக் கூடச் சந்தித்தேன். அவர் ஒரு அந்நியராக இருந்தமையால் அவரிடம் என்னால் எல்லாவற்றையும் சொல்ல முடிந்தது. அவர் எனக்கு மருந்துகள் தந்தார். அவை ஓரளவுக்கு என்னைச் சாந்தப்படுத்தினாலும், என்னுடைய மனநிலைப் பாதிப்பை முற்றாக நீக்கிவிடவில்லை.

என் நிலமையோ இன்னும் மோசமாகிக் கொண்டே போகிறது. என் மகளையாவது என்னால் காப்பாற்ற முடிந்ததே புண்ணியம்.

என்னுடைய கணவருக்கு இதைப்பற்றி எழுதியபோது 'ஒன்றுக்கும் கவலைப் படாதே' என்று எழுதியிருந்தார். உங்களுக்குத் தெரியுந்தானே எங்களுடைய ஆண்களைப் பற்றி? அவர் என்னை ஏற்றுக்கொள்ளுவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இந்த உலகத்தில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டவள் மாதிரி உணர்கிறேன். எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது!"

## மற்றொரு 'தேடல்'

இன்னுமொரு இளம் பெண்ணின் கதை இது. அவளுக்கு வயது பதின்மூன்று. ஒருகாலத்தில் அவளுடைய வீடு புலிகளின் முகாமாக இருந்தது.

'தேடல்' என்ற பெயரில் வந்த இந்திய இராணுவம் அச்சிறு பெண்ணை வீட்டிலிருந்த மற்றவர்களிடமிருந்து பிரித்துத் தனியே கொண்டுபோய் வைத்து அவளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது.

பின்னர் அச் சிறுபெண்ணும் குடும்பம் முழுவதும் கொழும்புக்கு ஓடிவிட்டனர். அவர்கள் மிகவும் நல்ல நிலையில் இருந்த மத்தியதர வர்க்க குடும்பத்தினராவர். தங்களுக்கு குற்றமிழைத்த நபர்களை அடையாளம் காட்டுவதிலோ, அல்லது வேறெந்த வழிகளில் இறங்கவோ அவர்கள் விரும்பவில்லை. அந்தக் கொடூர நிகழ்ச்சியை நினைவில் ஒரு இடுக்கில் போட்டுப் புதைத்துவிடவே அவர்கள் விரும்பினார்கள்.

வறிய ரோமன் கத்தோலிக்கர்கள் வசிக்கும் ஒரு பகுதியில் 55 வயதுடைய ஒரு விதவையையும், 22 வயதுடைய இன்னொரு பெண்ணையும் இரண்டு இந்தியப் படையினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினார்கள்.

நவம்பர் 18ம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் நடந்த சம்பவம் அது.

ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் இந்தியப்படை நிலைகொண்டிருந்தது.

வயதான பெண்ணைத்தான் இந்தியப் படைவீரர்கள் பார்த்திருக்கிறார்கள். அவள் தனது குடிசைக்குள் சென்றதும், அவரைப் பின்தொடர்ந்து சென்ற இந்தியப்படையினர் அப் பெண்மணி கூச்சலிட்டபோது, அவர் வாயைப் பொத்தியபடி பாலியல் வல்லுறவு கொண்டனர்.

அந்த நேரத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற இளம்பெண் வீட்டின் பின்பக்க வளவில் நின்றிருக்கிறாள். ஏதோ குழப்பமாய் சத்தம் கேட்பதை உணர்ந்த அப்பெண் கதவருகில் சென்று 'ஆச்சி, ஆச்சி' என்று கூப்பிட்டிருக்கிறாள்.

கதவு திறக்கப்பட்டு உள்ளே இழுக்கப்பட்ட அப் பெண்ணும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள்.



சென்னையில் ஈ.பி.டி.பி. அலுவலகம் (1987)

அந்த இளவயதுப் பெண் தன்னை விடுவித்துக்கொண்டு வீதிவழியே ஓடிப்போய் கத்தினாள். அவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

## முகாமுக்குள் புகுந்தனர்

அதனால் ஆத்திரம் கொண்ட மக்கள் ஒன்றுதிரள ஆரம்பித்தனர். கிட்டத்தட்ட 400 பேர் கொண்ட மக்கள் கூட்டம் இராணுவ முகாமுக்குள் புக ஆரம்பித்தது.

துப்பாக்கிகள் சகிதம் இராணுவத்தினர் உஷாராக இருந்தனர். கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து உள்ளே செல்ல முற்பட்டனர்.

அப்போது அந்த முகாமின் கட்டுப்பாட்டு அதிகாரி வெளியே வந்தார். மக்களை அங்கேயே நிற்கச் சொல்லிவிட்டு மூன்றுபேரை மட்டுமே விசாரணைக்காக உள்ளே கூப்பிட்டார். அவர்கள் அப் பெண்ணையும் கூட்டிச் சென்று நடந்தவற்றை எடுத்துச் சொன்னார்கள். குடிசையில் இருந்த வயதான பெண்ணையும் அழைத்துப் போனார்கள்.

அடையாள அணிவகுப்பு நடந்தது. அந்த இரண்டு குற்றவாளிகளும் அடையாளம் காணப்பட்டனர். விசாரணைக்குப் பின்னர் அந்த இரண்டு இராணுவத்தினரும் தண்டிக்கப்படுவார்கள் என்று அந்த அதிகாரி உறுதி கூறினார்.

பதினெட்டு வயதான ஒரு பெண்ணின் கதை இது.

அவளுடைய தகப்பனார் ஒரு சுருட்டுச் சுற்றும் தொழிலாளி. இருந்தாலும் மகளை க.பொ.த. உயர்தரம் வரை படிக்க வைத்திருந்தார்.

இந்தியப் படையினர் கோழி பிடிப்பதற்காக அவர்களுடைய வளவுக்குள் சென்றனர். குறிப்பிட்ட தினத்தன்று அங்குவந்த இரண்டு இராணுவத்தினர் தாயை மகளிடமிருந்து பிரித்து துப்பாக்கி முனையில் தாயை நிறுத்தி வைத்தனர்.

கூச்சலிட்டால் தாயைக் கொன்று விடுவோம் என்று மகளை மிரட்டினார்கள். தாயின் முன்பாக மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள்.





தமிழ்நாட்டில் பிரபாகரனுக்கு ஆதரவான சுவரொட்டிகள் (1987 நவம்பர்)

அந்தப் பெண் மற்றவர்களைப் போல் அல்லாமல் அந்தச் சண்டாளப் பாதகர்களை அடையாளம் காட்டி தண்டனை வாங்கிக் கொடுத்தாள்.

இன்னொரு பாலியல் வல்லுறவுச் சம்பவத்தை ஆராய்ந்த ஒரு டாக்டர் பின்வருமாறு கூறுகிறார்.

"அது யுத்தத்தின் ஆரம்பக் கட்டம். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் இளம் பெண்ணை இந்தியப் படையினர் கைது செய்தனர்.

நவம்பர் 16ம் திகதி இச் சம்பவம் நடைபெற்றது. அவளுடைய பெற்றோர்கள் விவசாயிகள். வயதானவர்கள்.

ஒரு புகைப்படம் சம்பந்தமாக விசாரிப்பதற்காகவே அவள் கைது செய்யப்பட்டாள். புகைப்படத்தில் அவளும் அவளுடைய பள்ளிச் சிநேகிதியும் இருந்தனர். அந்தச் சிநேகிதியின் சகோதரன் புலி என்று சந்தேகிக்கப்பட்டார்.

அந்த இளைஞன் தற்போது எங்கிருக்கிறான் என்பது பற்றியும், அவன் அவளது காதலன் என்றும், அந்த இளைஞன் தொடர்பான உண்மைகளைச் சொல்லாவிட்டால் அவளை அடித்து நொறுக்கப்போவதாகவும், அவளை பாலியல் வல்லுறவு செய்யப்போவதாகவும் இராணுவக் கப்டன் மிரட்டினான்.

## 24 மணிநேரம்

பின்னர் அப் பெண்ணை வீட்டில் கொண்டுபோய் விட்ட கப்டன் "24 மணிநேர அவகாசம் தருகிறேன். அதற்குள் யோசித்து உண்மைகளைச் சொல்லிவிடு" என்று மிரட்டிவிட்டுப் போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து இரண்டு படையினர் அந்த வீட்டுக்கு வந்தனர். பெற்றோரை ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு, அவளை ஒரு அறைக்குள் கொண்டு சென்றனர். ஒருவன் பாலியல் வல்லுறவு கொண்டான். அவளுக்கு இரத்தம் கசியத் தொடங்கியது.

"நாங்கள் மறுநாளும் வருவோம். நடந்ததை யாரிடமும் சொல்லக் கூடாது." என்று எச்சரித்துவிட்டு சென்றுவிட்டனர்.

பயந்துபோன அப் பெண் கிணற்றுக்குள் குதித்துவிட்டாள். அதிஷ்டவசமாக அயலில் உள்ளவர்களால் அவள் காப்பாற்றப்பட்டாள்.

அவ்வழியாக ரோந்துப் பணிக்காகச் சென்ற கப்டன் அங்கே வந்தான். அவனுடன் பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட இரண்டு பேரும் வந்திருந்தார்கள்.

தான் பயமுறுத்தியதால்தான் அப்பெண் கிணற்றில் குதித்திருக்க வேண்டும் என்று நினைத்த கப்டன் அவள் தலையைத் தடவி, தான் பயமுறுத்தியதுபோல் செய்யப் போவதில்லை என்றும், ஏதாவது பிரச்சனைகள் இருந்தால் தன்னிடம் கூறும்படியும் கேட்டான்.

அவளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இருவரும் அங்கு நின்றதால் கப்டனிடம் அவள் உண்மையைச் சொல்லவில்லை.

பின்பு, அப் பெண்ணை டாக்டரிடம் குடும்பத்தினர் கூட்டிச் சென்றபோதுதான், அந்தச் சம்பவத்தை முறையீடு செய்யும்படி டாக்டர் கூறினார். பின்னர் அப் பெண் முறையீடு செய்ததுடன், குற்றம் செய்த நபர்களையும் அடையாளம் காட்டினாள்.

## தொடர் சோகம்

மற்றுமொரு இளம்பெண்ணின் துரயக் கதை இது.

1987 ஜனவரியில் அவளது பெற்றோர்கள் இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் பலியாகிப் போனார்கள்.

அந்தப் பெண்ணுக்கு 30 வயது. அவளும் அவளோடு கூட இரண்டு பெண்களும் வீட்டில் இருந்தனர்.

இந்தியப் படைவீரர்கள் வந்து கதவைத் தட்டினார்கள். கதவைத் திறப்பதா வேண்டாமா என அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது, விடாமல் கதவு தட்டப்பட்டது. அவர்களே கதவை உடைத்து உள்ளே புகுந்தபோது பெண்கள் ஓடித் தப்பினார்கள். அந்த முப்பது வயதுப் பெண்ணை மட்டும் காணவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் சடலம் அவளது வீட்டுக் கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை செய்த நீதித்துறை மருத்துவ அதிகாரி அப்பெண்மீது பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டதற்கான தெளிவான அடையாளங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

அகதி முகாம்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் தம் வீடுகளுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தபோதுதான் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நடந்திருக்கிறது.

## வீதிச் சோதனை

கிராமம் விட்டுக் கிராமம் ஓடித்திரிந்து கொண்டிருந்த நேரத்தில் ஒரு இளவயதுப் பெண்ணும் அவளது சிறுதங்கையும் இந்தியப் படையினர் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது.





சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம்- பத்மநாபா (1987)

"எங்களுடைய உடலின் அந்தரங்கப் பகுதிகளை எல்லாம் எவ்வாறு இந்தப் படையினர் நகங்களால் கீறியும், தடவியும் அநாகரிகமாக நடந்துகொள்ள முடியும்?" என்று அந்தப் பெண் குமுறினார்.

இந்திய இராணுவ அதிகாரிகள் எமது பெண்களை இழிவாக நோக்கினர். ஈவு இரக்கமில்லாமல் நடந்துகொண்டனர்.

காரசாரமான ஒரு கலந்துரையாடலின் போது ஒரு இந்திய இராணுவ அதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டார்;

"இத்தகைய கதைகள் வெகுவாக மிகைப் படுத்தப்பட்டுள்ளன. நேற்று ஒரு பாலியல் வன்முறைச் சம்பவம் பற்றி நாங்கள் விசாரணை மேற்கொண்டபோது, கடைசியில் பார்த்தால் அது வெறும் மானபங்கப்படுத்தல் சம்பவமாகவே முடிந்திருக்கிறது."

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் குற்றச்சாட்டுக்களுக்கான ஊர்ஜிதங்கள் பலமாக இருந்தபோதும், இதே அதிகாரி சிறிது சமரசத் தொனியில் பேசவேண்டி வந்தபோது பின்வருமாறு சொன்னார்;

"பாலியல் வல்லுறவு என்பதை கொடிய குற்றமாக நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இது எல்லா யுத்தங்களிலும் நடக்கிற ஒரு சம்பவம். யுத்தத்தில் ஏற்பட்ட களைப்பு போன்ற உளவியல் காரணங்களை இதற்கு அடிப்படையாகச் சொல்லலாம்."

'முறிந்தபனை' நூலாசிரியர்களில் ஒருவரான ரஜினி திரணகம பின்வருமாறு கூறியிருந்தார்.

"பெண்களாகிய நாங்கள் இதனை ஜீரணித்துக்கொள்ள முடியாது. எமது உடல் எமக்குரியது. உங்களின் களை தீர்ப்பதற்கானதல்ல."

ஒரு இந்திய இராணுவ அதிகாரி இப்படியும் எதிர்ப்புக்குரல் எழுப்பியிருக்கிறான்.

"நாங்கள் வேண்டுமென்றே பெண்களைச் சோதனையிடுவதில்லை. இதோ பாருங்கள்! எங்கள் அதிகாரிகளில் ஒருவர் திறந்த வாகனத்தில் செல்லும்போது வீதியில் இரண்டு பெண்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பெண் கையசைக்க, மற்றப் பெண் ஸ்கேர்ட்டை உயர்த்தி தானியங்கி துப்பாக்கியை எடுத்து எங்கள் அதிகாரி மற்றும் ஜவான்மீது சுட அரம்பிக்கிறாள். பெண்களையும் நாங்கள் சோதிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? தொடைகளுக்கிடையேயும், ஜாக்கெட்டுக்குள்ளும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பவர்கள் பெண்ணாகவே இருக்கின்றனர்."

## கட்டுக்கதையா?

சோதனைச் சாவடிகளில் நூற்றுக்கணக்கான பெண்களைச் சோதனையிடுவது முழுவதையும் ஆண்களே செய்தனர். ஆயுதங்களைத் தேடுதல் என்பது சகல பெண்களின் உடலிலும் கைவைத்தல் என்பதற்கான அனுமதியாகிவிட்டிருந்தது. ஒரு சோதனைச் சாவடியில் ஒரு சிறு பெண் அழுது கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணின் மாதவிலக்குக்குப் பயன்படுத்தும் உள்துணியைக்கூட காட்டச் சொல்லிக் கேட்டார்களாம்.

இதெல்லாம் நடந்தும் இந்தியப் பத்திரிகைகள், ஏன் அனிதா பிரதாப் போன்ற பெண் பத்திரிகையாளர்கள்கூட பாலியல் வன்முறை என்பது வெறும் வதந்தி என்றும், இந்தியப் படைக்கு எதிராக கட்டிவிடப்பட்ட கட்டுக்கதை என்றும் எழுதியிருந்தனர்.

பெண்களைச் சோதனையிடுவதற்காக இந்திய மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் பெண்கள் பிரிவு வெகு அமர்க்களமாக கொண்டுவரப்பட்டது.

குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே பெண் காவல் நிலைகள் அமைக்கப்பட்டன. தொடர்ந்தும் ஆண் இராணுவத்தினரே பெண்களைச் சோதனையிட்டனர். ஆனையிறவில் ஒவ்வொரு பெண்ணும், இந்தியப் பொலிசாரால் சோதனையிடப்படும் கூண்டுக்குள் இருந்து ஆண் ரிசர்வ் பொலிசார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அகதி முகாமுக்குள் புகுந்த இந்திய இராணுவ வெறியர்கள் ஆண்களில் இருந்து பெண்களைத் தனியாகப் பிரித்தெடுத்தனர். பெண்களை மானபங்கம் செய்தனர். பெண்கள் ஒன்று சேர்ந்து கூச்சலிட்டதால் இந்தியப் படை வெறியர்கள் ஓடிவிட்டனர்.

வீடு வீடாக நடைபெற்ற தேடுதல் ஒன்றின்போது பாசையூரில் உள்ள ஒரு வீட்டில் பெண் ஒருவரின் கீழாடையை தூக்கியிருக்கின்றனர்.

ஆத்திரம்கொண்ட பெண்கள் குழு அப்பகுதியின் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் முறையிட்டனர். அதன்பின்னர் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்